தி.மு.க. இளைஞர் அணி

இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வ. எண்	நாள்	கழக மாவட்டம்	சட்டமன்றத் தொகுதி	இடம்	பேச்சாளர்கள்
1	19.04.2025	திருப்பூர் வடக்கு	திருப்பூர் வடக்கு	வெங்கமேடு, 9–வது வட்டம்	இரா.ராஜீவ் காந்தி, அ.நஸ்ரின் பானு
2	19.04.2025	புதுக்கோட்டை வடக்கு	கந்தர்வக்கோட்டை	பேருந்து நிலையம் அருகில்	தமிழ் கா.அமுதரசன், இ.நேரு
3	19.04.2025	கடலூர் கிழக்கு	புவனகிரி	கம்மாபுரம்	எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி
4	19.04.2025	திருச்சி வடக்கு	முசிறி	கைகாட்டி, பரிசில் துறை ரோடு	செந்தில்வேல், ம.சையது முஷரப்
5	20.04.2025	தருமபுரி கிழக்கு	பென்னாகரம்	பேருந்து நிலையம் அருகில்	பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், செ.யோகஸ்ரீ
6	20.04.2025	கடலூர் கிழக்கு	குறிஞ்சிப்பாடி	குள்ளஞ்சாவடி	வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன்
7	22.04.2025	சேலம் கிழக்கு	கெங்கவல்லி	பேரூராட்சி அலுவலகம் அருகில், கெங்கவல்லி	திண்டுக்கல் ஐ.லியோனி, செ.முத்துகுமார்
8	26.04.2025	கடலூர் கிழக்கு	சிதம்பரம்	பரங்கிப்பேட்டை	நாஞ்சில் சம்பத், க.செல்வமணி
9	27.04.2025	கடலூர் கிழக்கு	காட்டுமன்னார்கோயில்	திருமுட்டம்	வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி
10	27.04.2025	நீலகிரி	உதகை	கூக்கல்தொரை	வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, சி.கா.சுகன் மந்த்ரன்

அன்பகம், சென்னை – 18.
நாள் : 15–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

2200க்கும் மேற்பட்ட

மலைக் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ திட்டங்கள்!

சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஏப். 19- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் போது உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், 2200க்கும் மேற்பட்ட மலைக்கிராம மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவத் திட்டங்கள் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று பதிலளித்தார்.

ட்டி. இராமச்சந்திரன்: என்னுடைய தளி தொகுதியில் பெட்டமுகலாளம் ஊராட்சி என்பது 45 மலை கிராமங்களைக் கொண்ட அடர்ந்த வனப் பகுதி. யானைகள் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதாவது, பிரசவ மகப்பேறுக்கு செல்ல வேண்டுமென்றால் 25 கி.மீ. தூரம் உள்ள உன் செட்டி செல்ல வேண்டும் அல்லது 40 கி.மீ. தூரமுள்ள தேன்கனிக் கோட்டைக்கு செல்ல வேண்டி இருக்கிறது.

அதனால், சுகப்பிரசவங்கள் ஏற்படாமல், குறை பிரசவங்கள் ஏற்பட்டு, பிரசவ மரணங்கள் ஏற்படுகின்றன. பெட்டமுகிலாளத்திற்கு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னது போல பெட்டமுகிலாளம் பகுதியைச் சுற்றியிருக்கிற 8 கிராமங்களை வழியில்லாத காரணத்தினால் ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு மலைப்பாதைகளில் நடந்தே சென்று பார்த்திருக்கிறோம். அங்கு இருக்கின்ற மக்களின் மருத்துவ வசதிக்காக பெட்டமுகிலாளம் பகுதியில் ஒரு 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை நிறுத்தி, அங்கிருந்து பிற கிராம மக்களும் பயன் பெறும் வகையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதையும் கடந்து வந்தால், தேன்கனிக்கோட்டையில் இருக்கின்ற மருத்துவமனையில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதையும் கடந்து ஒரூரில் 100 கோடி ரூபாய் செலவில் மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, பெரிய அளவில் முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் திறந்து வைக்க இருக்கிறார்கள்.

எனவே, மலைக் கிராமங்களைப் பொறுத்த வரை, இந்த ஆட்சியில் ஏறத்தாழ 2,200-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் இருக்கின்ற மக்களும் பயன் பெறுகின்ற வகையிலான மருத்துவ திட்டங்களை செய்து கொண்டிருக்கிற அரசு இது என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அறிவார். எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியதைப் போல கூடுதல் வசதிகள் என்ன வெல்லாம் முடியுமோ அதையெல்லாம் செய்து தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வேலூர் தொகுதி – பழைய பேருந்து நிலையத்திலிருந்து

காரணாம்பேட்டை வழியாக மீண்டும் மினி பேருந்து!

சட்டப் பேரவையில் – ப.கார்த்திகேயன் கேள்விக்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதில்!

சென்னை,ஏப்.19- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:

ப.கார்த்திகேயன்: என்னுடைய வேலூர் தொகுதியில், மினி பேருந்து, பழைய பேருந்து நிலையத்திலிருந்து சாரனா மண்டபம் வழியாக, காரணாம் பேட்டை வழியாக, OLD TOWN வழியாக வேலப்பாடி வந்து, சங்கரம்பாளையம் வந்து, பழைய பேருந்து நிலையத்தை அடைகிறது. ஓராண்டுகாலமாக அந்த இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மினி பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: உறுப்பினர் கார்த்திகேயன் அவர்கள் தெரிவித்திருக்கிற வழியில் மினி பேருந்து எதனால் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். பயணிகளின் அடர்வு குறைவாக இருக்கிற, போதுமான அளவில் இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளதா அல்லது வேறு ஏதும் காரணம் உள்ளதா என்று ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

99-வது வார்டில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்!

பரிதி இளம் சுருதி தலைமையில் சமத்துவநாள் உறுதிமொழி ஏற்பு!

சென்னை, ஏப்.19- சட்ட மாமேதை புரட்சியாளர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் - மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட ஆர்.கே.புரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுவாரியகுடியிருப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சி வட்ட துணைச் செயலாளர் க.சீனிவாசன் மற்றும் வட்ட பொருளாளர் அண்ணன் ச.சத்தியமூர்த்தி அவர்களின் ஏற்பாட்டில், தி.மு.க அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கலந்துகொண்டு சமத்துவ திருநாளை போற்றி வணங்கி உறுதிமொழி ஏற்று, பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வானவில் விஜய் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய விழா - மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் - நிழல்கள் ரவி - மோகனசுந்தரம் - திருமதி.எழிலரசி புகழுரை!

சென்னை, ஏப்.19- சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 57, ஜனநாயக போரில் வெல்வோம்! தமிழர் தம் தனித்துவம் சொல்வோம்!! எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (19.04.2025, சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், சிட்கோ நகரில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில்விஜய் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.சி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பி. ஜெயின் எம்.சி, வே.வாசு எம்.சி., சாவித்திரிவீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி., டி.வி.செம்மொழி எம்.சி., வதாவாசு எம்.சி., ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, ஆர்.தீனதயாளன், க.சுகுமார், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப. லோகுபாபு. வெ.மகேந்திரன், ம.ஜெகதீஸ்வரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், கு.ஞானசம்மந்தன், மோகன சுந்தரம், திருமதி.எழிலரசி ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம், மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி., இசட்.ஆசாத் எம்.சி.,

மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு, சரிதா மகேஷ்குமார் எம்.சி., பா.ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், வி.இரமேஷ் (ஏ) நீலகண்டன் எம்.சி., எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இரா.கலைச்செல்வி, லயன் பி.உதயசங்கர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி,

வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து. இராமமூர்த்தி, பா. இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபிள்யூ, அமுல் நா. அறிவுடைநம்பி, வி.கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ.துரை, வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ.ப.சுரேஷ்பாபு, ம.சுந்தர், எபி கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார், ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன், வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு. பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்திய நாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார்,

மாவட்ட பிற அணி இணை துணை அமைப்பாளர்கள் ப.மலர்கொடி, சிட்கோ.எஸ்.அன்வர்தீன், சாந்திபில்லி, ஜி.கே.வெங்கட், வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவணன், வழக்கறிஞர் மா.முரளிவினோத், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், டாக்டர். எம்.ஜி.திவ்யானந்தன், ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி(எ]சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த.விஜயகுமார், கே.தங்கவேல்ராஜன், டி. சையத் நியமத்துல்லா, செங்கைசண்முகம், ஆ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் எம்.குணசேகரன், என்.எஸ்.விஜயகுமார், வழக்கறிஞர் கே.சுப்பிரமணி, எஸ்.பி.ஜெகா, பி.ஜெயந்தி, உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கா.யுவராணி, கே.ஜி.அய்யாதுரை, ஆர்.ராஜசேகர், ஜிம்.என்.மோகன்குமார், வி.ராஜ மாணிக்கம், ஓம்.புரசை சேகர், சா.அருண்குமார், ராபர்ட் ராஜன், எம்.விஜயகுமார், க.பிரகதீஸ்வர், கே.பி.சரவணன்,

வி.மே.கி.பகுதி அமைப்பாளர்கள் அனுசுயா பாண்டுரங்கன், கே.கிருஷ்ணவேணி, வெ.ராஜேஷ், எஸ்.வெற்றிவேல், சன்.இரவி, எஸ்.பழனிவேல், எம்.செந்தில்குமார், எ.விஜய், டி.ஜானகிராமன், பிரேமா தயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி.அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ், 94வது வட்ட நிர்வாகிகள் ஜெ.கணேசன், பா.ஆறுமுகம், கோனிகா பாஸ்கர், இரா.ஷலீலா, கேபிள் ஜெ.கண்ணன், கே.ஞானசேகரன், எ.தேவராஜ், ஜெ.செல்வராஜ், ஸ்ரீ.ஸ்ரீதர், 94 'அ' வட்ட நிர்வாகிகள் ந.வேணு, பி.வேணுகோபால், எ.மணிமாறன், ஆர்.நித்தியானந்தி அ.கு.பேரன், மு.சரவணன், ஆ.புஷ்பராஜ், ரா.கணேஷ்குமார், ரா.தட்சிணாமூர்த்தி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் சிட்கோ சேகர், எஸ்.எஸ். மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

ஆர்.எம்.ரங்கநாதன் முன்னிலையில்

99-வது வார்டில் ஏரியா சபைக் கூட்டம்!

பரிதி இளம் சுருதி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஏப்.19- சட்ட மாமேதை புரட்சியாளர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களின் 134வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் - மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, 99வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் ஆர். எம். ரங்கநாதன் முன்னிலையில், தி.மு.க அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி தலைமையில், எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட திடீர் நகர் குடியிருப்பில் ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது,

இக்கூட்டத்தில் திடீர் நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் குறைகளை எடுத்துரைத்தினர், பின்னர் ஏரியா சபா கூட்டத்தில் பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டார், மற்றும் 99வது வார்டுக்கு உட்பட்ட சாலை மாநகரில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

உடன்99வது வார்டு கோட்ட பொறியாளர் கே. சிவகுமார், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய உதவி பொறியாளர் திருமதி. சயீத் ரஃபயா, மின் துறை உதவி பொறியாளர் கே. கந்தன் துப்புரவு மேல் பார்வையாளர் முத்து ரவிச்சந்திரன் துப்புரவு ஆய்வாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி மின்சாரத்துறை உதவி பொறியாளர் வி. சுப்பிரமணியன் சுகாதார ஆய்வாளர் கார்த்திக் தீனதயாளன் கலந்து கொண்டனர்.